## உதவி செயற்பொறியாளர் (வே.பொ)(பொ) கடலூர் அவர்களின் செயல்முறைகள்
## பிறப்பிப்பவர்: திரு.கு.முரளி, பி.இ.எம்.பி.ஏ.

செமு.ஆணை இ/4220/2023 (2) நாள்: 23.01.2024

| | |
|---|---|
| பொருள்: | பணிக்குழு - தமிழ்நாடு அமைச்சுப் பணி - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தொகுதி 4-ல் அடங்கிய பணிகள் - 24.07.2022 அன்று நடைபெற்ற நேரடி போட்டித் தேர்வு - இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பணிநியமன ஆணை வழங்கப்பட்ட செல்வி.செ.தமிழரசி, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடுதல். |
| பார்வை: | 1) சென்னை, வேளாண்மை ஆணையர் அலுவலக வேளாண்மை கூடுதல் இயக்குநர் (ப&மே) அவர்களின் செயல்முறை ஆணை எண். OPS.5/92705/2023, நாள்: 08.12.2023. |
| | 2) தலைமைப் பொறியாளர் (வே.பொ) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண். ME.2/49207/2023, நாள்: 14.12.2023. |
| | 3) செயற்பொறியாளர் (வேபொ), கடலூர் அவர்களின் செயல்முறை ஆணை எண். அ/5851/2023, நாள்: 19.12.2023. |

-------------------------

ஆணை

பார்வை 1முதல் 3-ல் கண்டுள்ள செயல்முறை ஆணைகளின்படி,தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் 24.07.2022 அன்று நடைபெற்ற நேரடிபோட்டித் தேர்வின் மூலம்இளநிலை உதவியாளராக (பிணையமற்றது) தெரிவு செய்யப்பட்டு, பணிநியமன ஆணை வழங்கப்பட்ட செல்வி.செ.தமிழரசி,அவர்கள் 22.12.2023 முற்பகல் இவ்வலுவலகத்தில் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) ஆக பணியில் சேர்ந்துள்ளார்.

மேற்படி பணியாளருக்கு நடைமுறையில் உள்ள விதிகளின்படியும், பார்வை 1-ல் கண்டுள்ள சென்னை, வேளாண்மை ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு, செல்வி.செ.தமிழரசி, இளநிலை உதவியாளர் (பிணையமற்றது) அவர்கள் இளநிலை உதவியாளர் (பிணையமற்றது)-ஆக பணியில் சேர்ந்த நாளான 22.12.2023 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும், இவரது பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர் பணிகாலத்தில் இரண்டாண்டு பணிக்காலத்தினை முடித்திட தகுதிகாண் பருவத்தில் வைத்தும் ஆணையிடப்படுகிறது.

மேற்கண்ட தகுதிகாண்பருவ காலத்தில் அரசு கடித எண். 14735/எஸ்/10-1, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை, நாள்: 08.04.2010-ல் வழங்கப்பட்ட நெறிமுறைகளுக்கு உட்பட்டு, பவானிசாகர் பயிற்சி நிலையத்தில் நடைபெறும் அரசு அலுவலர்களுக்கான அடிப்படை பயிற்சியில் தேர்ச்சி பெறல் வேண்டும் எனவும் தெரிவித்து ஆணையிடப்படுகிறது.

மேலும், இப்பணிநியமனம் பின்வரும் விவரப்படியான வழக்கின் தீர்ப்பிற்கு முழுவதும் கட்டுப்பட்டது என தெரிவித்தும் ஆணையிடப்படுகிறது.

"The regularization is subject to the outcome of the WPs pending on the files of the Hon'ble High Court of Madras / Madurai Bench of the Hon'ble High Court of Madras Relating to the recruitment to the post included in Combined Civil Services Examination – IV (Group IV)"

23/01/24

உதவி செயற்பொறியாளர் (வேபொ)(பொ)
கடலூர்.

31/1/24

பெறுநர்
செல்வி.செ.தமிழரசி,
இளநிலை உதவியாளர்

23/01/24

நகல் : வேளாண்மை ஆணையர், சென்னை அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : தலைமைப் பொறியாளர் (வேபொ), சென்னை அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : கண்காணிப்புப் பொறியாளர் (வேபொ), விழுப்புரம் அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : வேளாண்மை இணை இயக்குநர், கடலூர் அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல் : செயற்பொறியாளர் (வே.பொ)(பொ) கடலூர் அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: பணிப்பதிவேட்டிற்கு.

உபரி: 1.